1987 எப்ரல் 8]

களை மீட்டர் வாங்கிக் கொடுக்கச் செய்து, பின்னர் அதன் விலையை திருப்பிக் கொடுக்கும் முறை நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மின்னளவிகள் வாரியத்திடம் இருப்பு இல்லாதவிடத்து நுகர்வோர்கள் மின்னளவிகளை வாங்கிக் கொடுத்து அதற்கான செலவை வாரியத்திடமிருந்து திரும்பப் பெறும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது.

திரு. வே. சோ. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக பல மாதங்களுக்கு முன்பாக மனுக்கள் கொடுத்தும், அவற்றுக்கு இதுவரையில் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. மேலும் ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் இதற்கான தீர்மானம் போட்டு, அதற்குரிய கட்டணங்களைக் கட்டியும், அவற்றுக்கான ஒயர்களை மாற்றுவதில் தாமதமாகிறது. இந்த வேலைகளை விரைவில் முடித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவைத் தலைவர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஊர் அல்லது ஒன்றியத்தைக் குறிப்பிட்டு, அங்கே இதுமாதிரி ஒரு விளக்குத் திட்டத்தில் தடையிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான பரிகாரம் காணப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.

345—(* வினா எண் 12106) திரு. கு. ரமணி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் இலாபத்தில் இயங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1983-84-ம் ஆண்டில் ரூ. 164.30 லட்சம் ரூபாயும், 1984-85-ம் ஆண்டில் 119.93 லட்சம் ரூபாயும் லாபம் ஈட்டியுள்ளது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு லாபம் சம்பாதித்தும்கூட, அந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தில் பாடுபடுகின்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சமான ஒரு மாத போனஸ் தான் கொடுக்கப்படுகிறது. அதுவும் அதனுடைய ஊழியர்களாக இருக்கக் கூடிய ஸ்டாஃப் மெம்பர்களுக்கும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினருக்கும் கொடுக்கப் படவில்லை. இதுபற்றி அமைச்சரவர்கள் ஏதாவது விசாரணை நடத்தியிருக்கிறார்களா? இதுபற்றி விவரங்கள் ஏதாவது தெரிவிக்கமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே தொழிலாளர்களுக்கு சட்டப்படி போனஸ் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொழிலாளர்கள் அல்லாதவர்களுக்கு போனஸ் கொடுக்கப் படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். இதைபற்றி விசாரித்து பதில் சொல்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் அல்லாத ஸ்டாஃப் மெம்பர்களும் அங்கே இருக்கிற ஊழியர்கள் தான். அவர்களுக்கும் போனஸ் உரிமை இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சில கொடைகள் கூட கொடுக்கப்படுவதில்லை. அந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தில் உள்ள நிர்வாக நடவடிக்கைகளில் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படுவதை அவ்வப்போது கவனித்து, சரியான முறையில் கொண்டு செல்வதற்கு, ஒரு 'ஸ்டாண்டிங் ஆர்டர்" இன்றைக்கு வரையில் இல்லாமலிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதைச் செய்தால் இதையெல்லாம் ஒழுங்குபடுத்தமுடியும். அதைச்செய்ய அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

1987 ஏப்ரல் 8]

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தேயிலைக் கழகத்தில் உள்ள அலுவலர்களுக்கு போனஸ் கொடுப்பது, ஸ்டாண்டிங் ஆர்டர் வழங்குவது சம்பந்தமாக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

நத்தம் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதி.

1—வினா 1992—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராஜக்கப் பட்டியில் கட்டப்பட்ட மேல் நிலைத் தொட்டிக்கு குடிநீர் சப்ளை இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராஜக்கப்பட்டியில் கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலைத் தொட்டி மூலம் தற்பொழுது தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2—வினா 1946—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், வேம்பார் பட்டியில் குடிநீர் வசதி செய்து தர அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா ?